செய்தி வெளியீடு எண்:872 நாள்:17.11.2020

**மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழர் பண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் திரு. க.பாண்டியராஜன் அவர்களின் அறிக்கை–நாள் 17.11.2020**

நாடகக் கலையையும், அதில் ஈடுபட்டுள்ள நாடகக் கலைஞர்களையும் ஊக்குவிக்கும் வகையில் அரசு பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக, நாடகக் கலைஞர்கள் தங்களது கலைத்திறமைகளை வெளிப்படுத்தி, நிகழ்சிகளை நடத்திட பிற இடங்களுக்கு தொடர்வண்டி, அரசுப் பேருந்துகளில் கட்டண சலுகையுடன் பயணம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. நாடகக் கலைஞர்கள் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு பயணம் மேற்கொள்ளும்போது கொண்டு செல்லும் இசைக்கருவிகள்/கலைப் பொருள்களை இலவசமாக பேருந்துகளில் கொண்டு செல்ல பல்வேறு இடர்பாடுகளை சந்தித்து வருகின்றனர் என நாடகக் கலைஞர்கள் சார்பில் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

அதனை கருத்தில் கொண்டு, நாடகக் கலைஞர்கள் தங்களது நாடக கலைத் திறமைகளை வெளிப்படுத்தும் விதமாக பிற இடங்களுக்கு பயணம் மேற்கொள்ளும்போது, பேருந்துகளில் தங்களது கலைப்பொருட்கள்/ இசைக் கருவிகளை இலவசமாக கொண்டு செல்ல அனுமதிக்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களிடம் வேண்டுகோள் தரப்பட்டது.

அதனடிப்படையில், கடந்த போக்குவரத்துத்துறை மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

> **“அரசு போக்குவரத்து கழக பேருந்துகளில் நாடகம் மற்றும் கிராமியக் கலைஞர்களுக்கு ஏற்கனவே 50 சதவிகித கட்டணச் சலுகை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கலைஞர்கள் தங்கள் வாத்தியக் கருவிகளை அரசு போக்குவரத்து கழக பேருந்துகளில் கட்டணமில்லாமல் எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படும்”**

மேற்குறிப்பிட்டுள்ள மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, நாடகக் கலைஞர்களுக்கு மட்டும் கீழ்க்காணும் உபகரணங்களை பேருந்துகளில் கட்டணமில்லாமல் இலவசமாக எடுத்துச்செல்ல அனுமதிக்கும்படி அனைத்து அரசு போக்குவரத்து கழக மேலாண் இயக்குநர்களுக்கு அறிவுறுத்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. (அரசாணை நகல் இணைக்கப்பட்டுள்ளது).

**நாடகக் கலைஞர்களுக்கான கலைப்பொருள்கள்/ இசைக்கருவிகள்**

1. ஆடை அணிகலன்கள்
2. ஒப்பனைப் பொருள்கள்
3. இசை வாத்தியக்கருவிகள்
4. ஆர்மோனியம்
5. தபேலா
6. டோலக்
7. மிருதங்கம் மற்றும்
8. இதர ஏதேனும் சிறிய அளவிலான இசைக்கருவிகள்

கலை பண்பாட்டுத் துறையின் ஓர் அங்கமான இயல், இசை, நாடக மன்றத்தின் வாயிலாக பல்வேறு நலத்திட்டங்களை நாடக, கிராமிய கலைஞர்களுக்கு செய்து வரும் நமது தமிழக அரசு, அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் வகையில், எதிர்வரும் காலங்களில் பல்வேறு திட்டங்களை தீட்டி, செயல்படுத்தும்.

**க.பாண்டியராஜன்**

தமிழ் ஆட்சி மொழி, தமிழர் பண்பாடு
மற்றும் தொல்லியல்துறை அமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

## சுருக்கம்

போக்குவரத்து – மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் 24.03.2020 அன்று சட்டமன்றப் பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்பு – அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் நாடகக் கலைஞர்களுக்கு 50 சதவிகித பயணக் கட்டணச் சலுகை வழங்கிவரும் நிலையில் தற்போது நாடகக் கலைகள் தொடர்பான உபகரணங்களை கட்டணமில்லாமல் இலவசமாக பேருந்துகளில் எடுத்துச் செல்ல அனுமதி வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

## போக்குவரத்து (பி.1)த் துறை

அரசாணை (நிலை) எண். 124

நாள்: 22.10.2020
சார்வரி வருடம், ஐப்பசி–6
திருவள்ளுவர் ஆண்டு 2051.

**படிக்கப்பட்டது:-**

1) அரசாணை (நிலை) எண்.4133, போக்குவரத்து (பி.1)த் துறை, நாள்.09.10.1992.
2) அரசாணை (நிலை) எண்.76, தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை, நாள்.21.05.1993.

**ஆணை:-**

24.03.2020 அன்று போக்குவரத்துத் துறையின் மானியக் கோரிக்கை எண்.48–ன் மீது சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற விவாதத்திற்குப் பின் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்:-

> "அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் நாடகம் மற்றும் கிராமியக் கலைஞர்களுக்கு ஏற்கனவே 50 சதவிகித கட்டணச் சலுகை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கலைஞர்கள் தங்கள் வாத்தியக் கருவிகளை அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் கட்டணமில்லாமல் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படும்"

2) அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் ஏற்கனவே நாடகக் கலைஞர்களுக்கு 50 சதவிகித கட்டணச் சலுகையுடன் பயணம் செய்ய மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் அனுமதி வழங்கப்பட்டு, பின்னர் அதனைத் தொடர்ந்து மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் மேற்குறிப்பிட்ட நாடகக் கலைஞர்கள் 50 சதவிகித கட்டணச் சலுகையுடன் பயணம் செய்வதற்கான உரிய வழிகாட்டுதல்களும் வெளியிடப்பட்டுள்ளது.

Scanned with CamScanner

3) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை நடைமுறைப்படுத்தும் பொருட்டு தற்போது நாடகக் கலைஞர்களுக்கு மட்டும் இணைப்பில் கண்டுள்ள உபகரணங்களை பேருந்துகளில் கட்டணமில்லாமல் இலவசமாக எடுத்துச் செல்ல அனுமதிக்கும்படி அனைத்து அரசு போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்களையும் அறிவுறுத்தலாமென்று அரசு முடிவு செய்து அவ்வாறே இதன் வழி ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**தர்மேந்திர பிரதாப் யாதவ்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**பெறுநர்:**

மேலாண் இயக்குநர்கள்,
அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்கள்.

**நகல்:**

1) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை–9.
2) அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், போக்குவரத்துத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
3) தனி அலுவலர், தலைவர் அலுவலகம், போக்குவரத்துத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
4) இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

N. [signature] 22/1/20
பிரிவு அலுவலர்.
22/1/20

Scanned with CamScanner

## இணைப்பு

(அரசாணை (நிலை) எண். 124, போக்குவரத்து (பி.1)த் துறை, நாள்: 22.10.2020)

### நாடகக் கலைஞர்களுக்கான கலைப் பொருட்கள் / இசைக் கருவிகள்

1) ஆடை அணிகலன்கள்
2) ஒப்பனைப் பொருட்கள்
3) இசை வாத்தியக் கருவிகள்
4) ஆர்மோனியம்
5) தபேலா
6) டோலக்
7) மிருதங்கம் மற்றும்
8) இதர ஏதேனும் சிறிய அளவிலான இசைக் கருவிகள்.

ஒம்/-XXXXXX
அரசு முதன்மைச் செயலாளர்

/உண்மை நகல்/

N. [signature] 22/10/20
பிரிவு அலுவலர்
22/10/20

Scanned with CamScanner